**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2020 நவெம்பர் 27 சுற்றறிக்கை 2020இன் 12ஆம் இலக்கம்**

---

**கொவிட் -19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான படுகடன் இசைவுத்தாமதம் மீதான 2020இன் 11ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான திருத்தம்**

இலங்கை மத்திய வங்கி, கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான படுகடன் இசைவுத்தாமதம் மீதான 2020இன் 11ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு பின்வரும் திருத்தங்களை வழங்குகின்றது.

2020இன் 11ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 2 பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

**2. விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

2.1 சலுகையினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு தகைமையுடைய கடன்பெறுநர்கள் மூலம் கோரிக்கைகள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2020.12.10 வரை நீடிக்கப்பட்டுள்ளது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், தீர்மானத்தினை இறுதிப்படுத்தி கோரிக்கை சமர்ப்பித்த 45 நாட்களினுள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் தீர்மானத்தை (வழங்குதல்/ நிராகரித்தல்) அறிவிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். இப்பந்தியின் ஏனைய வாசகங்கள் மாற்றமின்றி இருக்கும்.

பந்தி 2.1 இன் உடனடியாகப் பின்னர் பின்வரும் வாசகம் சேர்க்கப்படுகின்றது.

2.2 நிவாரண வழிமுறைகளை வழங்குவதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை உருவாக்குவதற்கும் அதற்கேற்றவாறு கிளை மட்ட பதவியினரை அறிவுறுத்துவதற்கும் அனைத்து பிரதம நிறைவேற்று அலுவலர்களும் இணங்குவித்தல் அலுவலர்களும் பொறுப்புடையோராவர்.

ஒப்பம்

**பேராசிரியர். டபிள்யு. டி. லக்ஷ்மன்**

நாணயச் சபையின் தலைவரும்,

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்